# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## <u>SESSIONS CASE NO. 131/2021</u>

## <u>Deposition of Witness for : PW 4</u>

**Name** : திரு. அன்பழகன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15-09-2022.**

**<u>முதல் விசாரணை</u> -**

நான் தற்போது மங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்து போன ரமேஷ் என்பவரை தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ரமேஷ் என்பவரை 4 - 5 பேர் தூக்கி வந்தார்கள். அவர் இறந்து விட்டார். அவரை போஸ்ட்மாட்டம் செய்வதற்காக அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள் போலீசார் விசாரணையிலும் இதைத்தான் சொன்னேன்.

**<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், விசாரணையில் ரமேஷ் 2ம் எதிரியை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர் டைலர் வேலை செய்து வந்தார் என்றும், ரமேஷுக்கு குடிப்பழக்கம் இருந்து வந்தது என்றும், அதனால் கணவன், மனைவி இருவருக்கும் சண்டை நடந்து வந்தது என்றும், மேலும் 2ம் எதிரிக்கும் எதிரி கார்த்திகேயனுக்கும் கள்ளத் தொடர்பு இருந்து வந்தது என்றும், அதன் காரணமாக ரமேஷ் அடிக்கடி 2ம் எதிரியிடம் சண்டை போட்டு வந்தார் என்றும், அதனால் 2ம் எதிரி சரண்யா அடிக்கடி தன் தாய் வீட்டிற்கு சென்று விடுவார் என்றும், சம்பவத்திற்கு 2 நாட்கள் முன்பு சமாதானம் செய்து 2ம் எதிரியை அழைத்து வந்தார் என்றும், என் வீட்டிற்கு பின்னால் உள்ள தெருவில் தயாளன் என்பவர் வீட்டை வாடகைக்கு எடுத்து ரமேஷும் 2ம் எதிரியும் குடியிருந்து வந்தார்கள் என்றும். கடந்த 7.3.2017 இரவு 1.30 மணியளவில் ரமேஷ் குடியிருந்த வீட்டில் சண்டை போட்டுக் கொள்ளும் சத்தம் கேட்டது என்றும், நான் என் வீட்டிற்கு பின்னால் நின்று பார்த்த போது ஐயோ என்னை கொல்ராங்கனே கொல்ராங்களே என்று சத்தம் கேட்டது என்றும், இவனை அடித்துக் கொன்று விடு என்று சரண்யாவின் சத்தம் கேட்டது என்றும்,

பின்னர் ரமேஷ் வீட்டிடம் சென்று பார்த்த போது அங்கு ஆஜர் எதிரிகள் மூவரும் இருந்தார்கள் என்றும், அங்கு ரமேஷின் இரண்டு கைகளையும் 2ம் எதிரி பிடித்துக் கொண்டார் என்றும், 1ம் எதிரி முகத்திலும், உடல் முழுவதும் மாறி மாறி குத்தினார் என்றும், 3ம் எதிரி ராஜசேகர் இவனை அடித்து கொல்லுங்கடா என்று கத்தினார் என்றும், 1ம் எதிரி அருகில் இருந்த கயிறை எடுத்து ரமேஷின் கழுத்தில் போட்டு இருக்கினார் என்றும், என்னை பார்த்த கார்த்திகேயனும், ராஜசேகரும் ஓடிவிட்டார்கள் என்றும், இந்த சம்பவத்தை எங்கள் ஊரைச் சேர்ந்த கமல்நாத்தும், பெரியசாமியும் பார்த்தோம் என்றும், நாங்கள் பயந்து கொண்டு சொன்னால் பிரச்சனையாகி விடும் என்று யாரிடமும் சொல்லாமல் வீட்டிற்கு சென்று விட்டோம் என்றும், தற்போது எங்கள் உறவினர்களாகிய எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- அன்பழகன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.